**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 17.09.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## காலநிலைக்கேற்ற புதுமையான அணுகுமுறைகள் மூலம் குறைந்த உமிழ்வு கொண்ட நெல் சாகுபடியை மேம்படுத்துதல் தொடர்பான சர்வதேசப் பயிலரங்கு

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் கீழ் செயல்படும் சுற்றுச்சூழல் அறிவியல் துறை மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த டெமாசெக் உயிர் அறிவியல் ஆய்வகம் (TLL) இணைந்து, "காலநிலைக்கேற்ற புதுமையான அணுகுமுறைகள் மூலம் குறைந்த உமிழ்வு கொண்ட நெல் சாகுபடியை மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் சர்வதேசப் பயிலரங்கு 17 செப்டம்பர் 2026 அன்று நடைபெற்றது. இந்தப் பயிலரங்கு, விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், வேளாண் வல்லுநர்கள் மற்றும் பங்குதாரர்கள் ஒன்றிணைத்து, அறிவைப் பரிமாறிக் கொள்ளவும், நிலையான, காலநிலைக்கேற்ற குறைந்த பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு கொண்ட நெல் சாகுபடிக்கான புதுமையான அணுகுமுறைகளைப் பற்றி விவாதிக்கவும் வழிவகுத்தது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவரான முனைவர் ப. முரளி அர்த்தநாரி அவர்கள் வரவேற்புரையாற்றினார். சுற்றுச்சூழல் அறிவியல் துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் அ. பரணி, காலநிலைக்கேற்ற மற்றும் குறைந்த உமிழ்வு கொண்ட நெல் சாகுபடியை மேம்படுத்துவது குறித்த தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

இயற்கை வள மேலாண்மை இயக்குநரான முனைவர் சு. கார்த்திகேயன், நிலையான நெல் உற்பத்தியின் முக்கிய அம்சங்களைப் பற்றி எடுத்துரைத்தார். பயிர் மேலாண்மை இயக்குநரகத்தின் இயக்குநரான முனைவர் செ. பழனிவேலன் அவர்கள், நெல் சாகுபடியில் காலநிலைக்கேற்ற அணுகுமுறைகளை வலுப்படுத்துவது குறித்த தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு துணைவேந்தர் மற்றும் பதிவாளரான முனைவர் மு. ரவீந்திரன், குறைந்த பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு மற்றும் நிலையான நெல் உற்பத்தி முறைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி தொடக்கவுரை ஆற்றினார்.

தொழில்நுட்ப அமர்வுகள், குறைந்த பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு, நெல் சாகுபடியின் முக்கிய அறிவியல் மற்றும் கள அளவிலான அம்சங்களில் கவனம் செலுத்தின. TLL நிறுவனத்தின் திட்டத் தலைவர் முனைவர். சீனிவாசன் ராமச்சந்திரன், ஆசியா முழுவதும் காலநிலைக்கேற்ற நெல் சாகுபடி முறைகளை விரிவுபடுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையை எடுத்துரைத்தார். நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் முனைவர். எ. பரமேஸ்வரி அவர்கள், பருத்திக்கோட்டையில் 100 ஹெக்டேர் பரப்பளவில் நடத்தப்பட்ட பருவக்கால சோதனைகளின் முடிவுகளை, வேளாண் செயல்திறன், மீத்தேன் வாயு குறைப்பு மற்றும் நெல் சாகுபடி ஆகியவற்றை எடுத்துரைத்தார். மண் நுண்ணுயிரிகளின் இடைவினைகள் மற்றும் நெல் சாகுபடியில் குறைந்த பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு குறித்த முக்கியத்துவத்தை விளக்கினார். இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் பேராசிரியர் முனைவர். வீ. தவமணி. மேலும், TLL நிறுவனத்தின் விஞ்ஞானியும் முதன்மை வேளாண் வல்லுநருமான முனைவர். கின்ஸ் வர்கீஸ், ஒப்பீட்டு வேளாண்–காலநிலை முடிவுகளையும், TLL நிறுவனத்தின் செயல்முறைத் தொகுப்பையும் முன்வைத்தார்.

TLL–இன் திட்ட மேலாளரான முனைவர் கோ புவே யீ, நிறுவனக் கூட்டாண்மைகள் மற்றும் TNAU–இன் விரிவாக்க அமைப்பு ஆகியவற்றை எடுத்துரைத்தார். முன்மொழியப்பட்ட தொழில்நுட்பங்கள், செயல்படுத்தப்படவுள்ள இடங்கள் மற்றும் ஒப்புதல் நடைமுறைகள் குறித்து முனைவர். பெ. கலைசெல்வி மற்றும் முனைவர். செ. பவுல் செபாஸ்டியன் ஆகியோர் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் விளக்கினர். மேலும், கேட்ஸ் அறக்கட்டளையின் வேளாண் மேம்பாட்டுத் துணை இயக்குநரான முனைவர். ஸ்ரீவல்லி கிருஷ்ணன், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவது மற்றும் சாத்தியமான ஒத்துழைப்பு குறித்த தனது கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியின் வட்டமேசை கலந்துரையாடலில், எதிர்கால ஆராய்ச்சி திட்டங்கள், விரிவாக்கப் பாதைகள், சவால்கள், நிறுவன ஒத்துழைப்பு, நிதி வாய்ப்புகள் மற்றும் தொடர்ச்சியான TNAU–TLL ஒத்துழைப்புக்கான ஒரு செயல் திட்டம் ஆகியவை விவாதிக்கப்பட்டன. முனைவர். சீனிவாசன் ராமச்சந்திரன் மற்றும் முனைவர். ஸ்ரீவல்லி கிருஷ்ணன் ஆகியோரின் கருத்துக்களுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது, அதனைத் தொடர்ந்து டாக்டர் செ. பவுல் செபாஸ்டியன் நன்றியுரை வழங்கினார். இரண்டு பருவங்களில் 100 ஹெக்டேர் பரப்பளவில் பெறப்பட்ட கள அளவிலான முடிவுகள், TLL உரக் கலவை, பாய்ச்சலும்–காய்ச்சலும் நீர்ப்பாசன முறை + TLL உரக் கலவை + மீத்தேனைப் பயன்படுத்தும் நுண்ணுயிரிக் கலவை + பருவத்திற்கேற்ற நெல் ரகங்கள் ஆகியவற்றின் தாக்கத்தை வெளிப்படுத்தின. இது வழக்கமான விவசாயிகளின் நடைமுறைகளுடன் ஒப்பிடும்போது 20% மகசூல் அதிகரிப்பையும், 369.4 டன் $CO_2$ சமமான உமிழ்வைக் குறைப்பதுடன், காலநிலைக்கேற்ற நெல் சாகுபடிக்காக அவற்றை விரிவுபடுத்துவதற்கும் ஆதரவளித்தது. குறைந்த பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வு கொண்ட நெல் சாகுபடிக்காக, அறிவியல் கண்டுபிடிப்புகளை நடைமுறைக்கு உகந்த, பொருளாதார ரீதியாக சாத்தியமான மற்றும் விவசாயிகளுக்கு உகந்த வழிமுறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கான மதிப்புமிக்க ஆலோசனைகளை இந்தப் பயிலரங்கம் வலியுறுத்தியது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*